முற்பகல் 10-45

மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, சிறையில் இருப்பவர்களை உடனடியாக விடுதலை செய்ய ஆணையிடுகிறேன் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

3. விதி 110-இன் கீழ் முதலமைச்சரின் அறிக்கைகள்

(அ) உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் வீட்டை வெடிகுண்டு வைத்துத் தகர்க்க சிலர் முயற்சித்தது குறித்தும், அது குறித்து எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள் குறித்தும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : பேரவை விதி 110-ன் கீழ் ஊதியக் குழு பரிந்துரை மீது அரசின் நடவடிக்கை பற்றியும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் தன்னுடைய வீடு தகர்க்கப்பட சிலர் முயற்சி செய்ததாக இந்தப் பேரவையில் தெரிவித்த ஒரு கருத்து (குறுக்கீடு) குறித்தும் ஆக இரண்டு அறிக்கைகளை இப்பேரவைக்கு அளிக்க மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் கேட்டுள்ளார்கள்.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் எழுப்பிய பிரச்சினை பற்றி ஒரு அறிக்கையை முதலிலேயும், அடுத்து ஊதியக் குழு மீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய இன்னொரு அறிக்கையை அடுத்தும் பேரவைக்கு இப்போது அளிப்பார்கள்.

*மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு சட்டமன்ற உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கடந்த 24—3—1992 அன்று இம்மாமன்றத்தில் உரையாற்றும்போது தன்னுடைய சொந்த ஊரான அழகம்பட்டியில் உள்ள தனது வீட்டை பாட்டாளி மக்கள் கட்சியைச் சேர்ந்த திரு. சிங்கம் வெடிகுண்டு வைத்துத் தகர்க்க முயற்சிகள் மேற்கொண்டதாகத் தெரிவித்தார்கள். அன்றே நான் அவர்கள் கூறிய விவரங்கள் குறித்து விசாரிக்கப்பட்டு அதன் மீது தக்க நடவடிக்கைகள் எடுக்கப்படும் என்று தெரிவித்தேன். அதன் தொடர்பாக சில முக்கிய விவரங்களை இந்த மாமன்றத்திற்குத் தெரிவிக்க நான் விரும்புகிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் கூறிய விவரங்கள் பற்றி விசாரிக்கவும், நடவடிக்கைகள் தொடரவும், உயர் மட்ட காவல் துறை அதிகாரி ஒருவரை அனுப்பி வைக்க ஆணையிட்டேன்.

அதன்படி குற்றப்பிரிவு காவல்துறை தலைவர், "இன்ஸ்பெக்டர் ஜெனரல் ஆப் போலீஸ் (கிரைம்)" 27—3—1992 அன்று நிலக்கோட்டைப் பகுதிக்குச் சென்று விசாரணைகள் மேற்கொண்டு தனது அறிக்கையையும் சமர்ப்பித்துள்ளார். அவர்களது அறிக்கையின்படி மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் வீட்டை கடந்த மார்ச் மாதத்திலே வெடிகுண்டு வைத்துத் தகர்க்க சதித் திட்டம் ஒன்று தீட்டப்பட்டு இருந்தது தெரிய வந்துள்ளது. சீரகம்பட்டியைச் சேர்ந்த சிங்கம் என்ற சிங்கராஜ் மற்றும் அவருடைய நண்பர்களான அவயம்பட்டியைச் சேர்ந்த பரமசிவம், விளாங்குடியைச் சேர்ந்த கணேசன், ராஜாசிங், துரைசிங் மற்றும் செந்தூரான் ஆகியோர் இந்தச் சதித்திட்டத்தை வகுத்துள்ளனர் என்றும் இத்திட்டத்தை மேரி என்ற பெண்மணியின் மூலம் நிறைவேற்ற முயற்சி செய்துள்ளனர் என்றும் தெரிய வந்துள்ளது.

திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் வீட்டிற்கு 22-3-1992 அன்று சென்ற மேரி இந்தச் சதித் திட்டத்தைப் பற்றி மாண்புமிகு உறுப்பினர் அவர்களின் சகோதரி திருமதி செல்லத்தாயிடம் தெரிவித்ததைத் தொடர்ந்து அவர் நிலக்கோட்டை காவல் நிலையத்திற்குத் தகவல் கொடுத்து பாதுகாப்பு கோரியுள்ளார். உடனடியாக தக்க பாதுகாப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டன. இது தொடர்பாக திருமதி செல்லத்தாய் கொடுத்த புகாரின் பேரில் அம்மைநாயக்கனூர் காவல் நிலையத்தில் குற்ற எண். 122/92-ல் இந்திய தண்டனைச் சட்டப் பிரிவுகள் 120-பி மற்றும் 506-ன் கீழும் 1908 ஆம் ஆண்டு வெடி மருந்து சட்டப் பிரிவு 3-ன் கீழும் சிங்கராஜ் மற்றும் 5 நபர்களின் மீது வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டது. பின்னர் இந்த வழக்கு காவல் நிலைய எல்லை குறித்து சமயநல்லூர் காவல் நிலயத்திற்கு மாற்றப்பட்டு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. இந்த வழக்கிலே தொடர்புடைய பரமசிவம, கணேசன், ராஜாசிங், துரைசிங் மற்றும் செந்தூரான் ஆகிய 5 நபர்களும் காவல் துறையினரால் 30-3-1992 அன்று கைது செய்யப்பட்டனர் தலைமறைவாக இருந்த சிங்கம் என்ற சிங்கராஜ் கடந்த 11-4--1992 அன்று திருநெல்வேலி குற்றவியல் நீதி மன்றத்தில் சரண் அடைந்தார். இந்த வழக்கு கிரைம் பிராஞ்ச் சி.ஐ.டி. பிரிவுக்கு மேல் விசாரணைக்காகவும், தொடர் நடவடிக்கைகளுக்காகவும் மாற்றப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

சென்ற 24-3-1992 அன்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்கள் இது சம்பந்தமாக பேசியபோது குறுக்கிட்டு கூறியவற்றை

இங்கே நினைவுபடுத்த விரும்புகிறேன். அன்று அவர் ''ஏதோ ஒரு சிங்கத்தை வைத்து, அந்த அம்மாளுடைய குடும்பத்தை தகர்ப்பதற்கு முயற்சி என்றார்கள். அது பாட்டாளி மக்கள் கட்சியா? அந்த சிங்கம் இதிலே இருக்கிறாரா? இருந்தால் எந்தப் பொறுப்பிலே இருக்கிறார்? என்று கேட்டார். இதுகுறித்த உண்மை நிலையினை மாண்புமிகு உறுப்பினர்களுக்கும், தமிழக மக்களுக்கும் தெரிவிக்க நான் கடமைப்பட்டுள்ளேன். இந்த ஆண்டு 31—1—1992 அன்று பழனி நகரிலும், 15-3-1992 அன்று திண்டுக்கல் மற்றும் மைக்கேல்பாளையத்திலும் பாட்டாளி மக்கள் கட்சி பொதுக் கூட்டங்கள் நடத்தியது. 31—1—1992 அன்று பழனியில் நடந்த கூட்டத்தில் பாட்டாளி மக்கள் கட்சியின் நிறுவனர் டாக்டர் ச. இராமதாஸ் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றியுள்ளார். 15—3—1992 அன்று திண்டுக்கல் நகரிலும், மைக்கேல்பாளையத்திலும், மற்றும் வழியில் உள்ள பல கிராமங்களில் பாதையோர கூட்டங்களில் மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் கலந்துகொண்டு உரையாற்றியிருக்கின்றார். இக்கூட்டங்களில், குறிப்பாக இருவரும் விடுதலைப் புலிகளை ஆதரித்து பேசியிருக்கின்றார்கள். அவர்கள் அந்தக் கூட்டத்தில் தெரிவித்த இதர கருத்துக்களைப் பற்றி நான் இங்கு குறிப்பிட விரும்பவில்லை. ஆனால் மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் 15-3-1992 அன்று அப்பகுதிகளுக்குச் சென்று உரையாற்றியிருக்கின்றார் என்பதும், மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் இல்லத்தை வெடி வைத்து தகர்க்க தீட்டிய திட்டத்தின் முதல் கட்டமாக மேரி என்ற பெண் 22—3—1992 அன்று அவர் வீட்டுக்குச் சென்றிருக்கின்றார் என்பதும் மறைக்க முடியாத உண்மைகளாகின்றன.

முற்பகல் 10-50

இந்த சதித் திட்டத்தைத் தீட்டிய குழுவின் தலைவர் சிங்கம் என்ற சிங்கராஜ் என்பதும் தெரிய வந்துள்ளது. அந்தச் சிங்கம் யார் என்று மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் அன்று கேட்டார். அந்தச் சிங்கம் சீரகம்பட்டியைச் சேர்ந்த திரு. மூக்கன் என்பவரின் மகனான திரு. சிங்கம் என்ற சிங்கராஜ் ஆவார். இவர் பாட்டாளி மக்கள் கட்சியின் நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றியத் தலைவர். அதுமட்டுமல்ல, இவர் திண்டுக்கல் அண்ணா மாவட்டத்தின் பாட்டாளி மக்கள் கட்சியின் மாணவர் அணி செயலாளரும் கூட. எனவே, மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் இல்லத்தை வெடிகுண்டு வைத்து தகர்க்க திட்டம் தீட்டிய திரு சிங்கம் பாட்டாளி மக்கள் கட்சியைச்

சேர்ந்தவர் என்பது மட்டுமல்லாமல் அக்கட்சியின் முக்கியப் பொறுப்பும் வகிப்பவர் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் தனக்கு இந்தச் சிங்கத்தைத் தெரியாது என்று இங்கே குறிப்பிடலாம். ஆனால் திரு. சிங்கம் மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்களின் ஒரு அபிமானி என்பதற்குப் போதுமான ஆதாரங்கள் உள்ளன. மாண்புமிகு உறுப்பினர் திரு. பண்ருட்டி இராமச்சந்திரன் அவர்கள் மாண்புமிகு உறுப்பினர் திரு. தாமரைக்கனி அவர்களால் சட்டமன்றத்தில் தாக்கப்பட்டதாக வெளிவந்த செய்திகளைத் தொடர்ந்து நிலக்கோட்டை ஊராட்சி ஒன்றிய அலுவலகத்திற்கு அருகிலுள்ள ஒரு பாலத்திற்கு வெடி வைத்துத்தகர்த்தவர்தான் இந்த சிங்கம்.

இவர் மீதும் இதர 10 நபர்கள் மீதும் இது தொடர்பாக நிலக்கோட்டை காவல் நிலைய குற்ற எண். 287/91-ல் 6—7—1991 அன்று வழக்கு ஒன்று பதிவு செய்யப்பட்டு விசாரணையில் உள்ளது.

திரு. சிங்கத்தின் மீது நிலக்கோட்டை காவல் நிலையத்தில் பாட்டாளி மக்கள் கட்சி நடத்திய போராட்டங்களின்போது அவர் கலந்துகொண்டு வன்முறை செயல்களில் ஈடுபட்டுள்ளமைக்காக மொத்தம் 4 வழக்குகள் பதிவு செய்யப்பட்டு நடவடிக்கைகள் தொடரப்பட்டு வருகின்றன என்பதும் தெரிய வந்துள்ளது. பாட்டாளி மக்கள் கட்சியின் பொறுப்பிலுள்ள திரு. சிங்கம் மற்றும் 5 நபர்கள் மாண்புமிகு உறுப்பினர் திருமதி ஏ. எஸ். பொன்னம்மாள் அவர்களின் வீட்டை வெடிகுண்டு வைத்து தகர்க்க முயற்சித்தது தொடர்பாக பதிவு செய்யப்பட்ட வழக்கை தற்போது கிரைம் பிராஞ்ச் சி. ஐ. டி. காவல் துறையினர் கவனத்துடன் விசாரித்து வருகின்றார்கள் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

இப்பேரவையின் மாண்புமிகு உறுப்பினர்கள் அனைவரின் உயிருக்கும் உடைமைகளுக்கும் இந்த அரசு தக்க பாதுகாப்பு அளிக்கும் என்பதையும் தெரிவித்துக்கொள்கிறேன். (மேசையைத் தட்டும் ஒலி) (குறுக்கீடு)....

மாண்புமிகு பேரவைத் தலைவர் : ரூல் 110-ல் என்ன சொல்லப்பட்டிருக்கிறது என்று உங்களுக்குத் தெரியும். இந்த விதியின்கீழ் அறிக்கை வைக்கப்படுகிறபோது எந்த விவாதத்திற்கும் இடமில்லை. (குறுக்கீடு) விவரம் தேவை யென்றால் நீங்கள் அதற்கு வேறுவிதமாக பின்னர் ஒருநேரத்தில்தான் கொண்டுவர வேண்டும்

(குறுக்கீடு) வேறு விதமாக நாளையோ, நாளை மறுநாளோ நீங்கள் என்னுடைய அனுமதியைப் பெற்றுத்தான் கொண்டுவர முடியும். (குறுக்கீடு) விதியில் அப்படித்தான் இருக்கிறது. (குறுக்கீடு) விதியில் எனக்குக் கொஞ்சமாவது இடம் இருந்தால் இப்பொழுது உங்களை அனுமதித்திருப்பேன். (குறுக்கீடு) நீங்கள் அன்று கேட்டதற்கு ''அதற்கு சம்பந்தமில்லை'' என்று சொன்னீர்கள். ''அதற்கு சம்பந்தம் இருக்கிறது'' என்பதை மாண்புமிகு முதலமைச்சர் தெரிவித்திருக்கிறார்கள். விதி 110-இன் கீழ் வைக்கப்படுகிற அறிக்கையின்மீது, பர்சனல் எக்ஸ்பிளனேஷன் என்ற வகையில் தெரிவிப்பதற்கு இந்த நேரத்திலே வாய்ப்பு இல்லை. (குறுக்கீடு) இல்லை, வேண்டாம்.

(ஆ) ஊதியக் குழு பரிந்துரைகளால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகள் பற்றிப் பரிசீலித்த அரசு அலுவலர் குழுவின் பரிந்துரைகளின்மேல் அரசு எடுத்துள்ள முடிவுகள் குறித்து.

முற்பகல் 10-55

மாண்புமிகு பேரவைத் தலைவர் : அடுத்து ஊதியக் குழு பரிந்துரைமீது அரசு எடுத்த நடவடிக்கை பற்றிய அறிக்கை. மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள்.

* மாண்புமிகு டாக்டர் ஜெ. ஜெயலலிதா : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தமிழ்நாட்டில் 1988 ஆம் ஆண்டு ஐந்தாவது ஊதியக் குழு குடியரசுத் தலைவர் ஆட்சிக் காலத்தில் ஏற்படுத்தப்பட்டது. ஐந்தாவது ஊதியக் குழுவின் பரிந்துரைகளின் அடிப்படையில் 1989 ஆம் ஆண்டு ஜூன் திங்களில் அரசு ஆணைகள் வெளியிடப்பட்டன. ஐந்தாவது ஊதியக் குழுவின் முக்கியமான பரிந்துரை, மேல் மட்டத்தில் சில பிரிவினர்கள் தவிர, இதர பிரிவினர்களுக்கு, மத்திய அரசுக்கு இணையான ஊதிய விகிதங்கள் வழங்கலாம் என்பது தான். இதன் அடிப்படையில் அரசு சில மாற்றங்களைச் செய்து வெளியிட்ட ஆணைகள்மீது பல அலுவலர் சங்கங்களும் அலுவலர்களும் பல்வேறு கோரிக்கைகளைத் தொடர்ந்து எழுப்பி வருகின்றனர். அத்துடன் புதிய ஊதிய விகிதங்களை அறிமுகப்படுத்தியதால் ஏற்பட்டுள்ள முரண்பாடுகளைக் களைய வேண்டும் என்றும் பல கோரிக்கைகள் அரசுக்கு வந்துள்ளன.

குறிப்பாக அமைச்சுப் பணியாளர்கள் தங்களுடைய ஊதிய விகிதங்களில் பல முரண்பாடுகள் ஏற்பட்டுள்ளன என்று தொடர்ந்து வாதாடி வருகிறார்கள். முன்பு